முன்மொழிவுகளுக்கான விண்ணப்பம் கோரல் **(RFP)**

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் **(DPMM)**

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் **(ADB)** நிதியளிக்கப்படும் பெறுபேறு அடிப்படையிலான கடன் வழங்கல் திட்டமான "உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பிற்காக ஒருங்கிணைந்த சுகாதார சேவைகளை வலுப்படுத்துதல்" என்பதன் கீழ் கடன் விடுவிப்புடன் தொடர்புடைய குறிகாட்டிகளை **(DLI)** அடைந்துள்ளமையைச் சுயாதீனமாகச் சரிபார்ப்பதற்காக ஆலோசனை நிறுவனமொன்றைத் தெரிவு செய்தல்.

RFP No: DPMM/RFP/2026/01

நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அமைச்சு ஆலோசனைப் பெறுகைக் குழு (CPCM) கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் (இனி "சேவை பெறுநர்" எனக் குறிப்பிடப்படும்) சார்பில் மேற்குறிப்பிட்ட ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு அழைப்பு விடுக்கின்றது.

ஆலோசனைச் சேவையின் நோக்கம்

DPMM ஆனது, பின்வரும் பணிகளை மேற்கொள்வதற்காக DPMM-க்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்கும் ஒரு நிறுவனத்தை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க உத்தேசித்துள்ளது. (அ) DLI சரிபார்ப்புச் செயல்முறையைத் திட்டமிடுதல், (ஆ) சரிபார்ப்பு நெறிமுறைகளுக்கு அமைவாக, குறித்த குறிகாட்டிகளுக்கான தரவுகளின் தரத்தைத் தணிக்கை செய்வதற்கான DLI சரிபார்ப்புச் செயல்முறையை வடிவமைத்து நடைமுறைப்படுத்துதல் மற்றும் (இ) நிதி வழங்கல் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்குப் போதுமான விரிவான மற்றும் தரமான சரிபார்ப்பு அறிக்கைகளை உரிய காலத்தில் தயாரித்து சமர்ப்பித்தல்.

குறித்த நிறுவனம் ஆவணங்களைப் பரிசீலித்தல் மற்றும் கள விஜயங்களை மேற்கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் பெறுபேறுகளைச் சரிபார்க்க வேண்டும் (இச்சரிபார்ப்பு பொதுவாக 2027, 2028, 2029 மற்றும் 2030 ஆகிய ஆண்டுகளில் ஒவ்வொரு வருடமும் ஜனவரி 15 ஆம் திகதி முதல் மார்ச் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வருடத்திற்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும்). 2027 முதல் 2030 வரையான ஒவ்வொரு வருடமும் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் வருடாந்த பெறுபேறு சரிபார்ப்பு அறிக்கைகள் DPMM இற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். சரிபார்ப்பு நடவடிக்கைகளில் ஆவணங்களைப் பரிசீலித்தல், 09 மாகாணங்களிலும் உள்ள நிறுவனங்கள் மற்றும் சுகாதார அமைச்சின் நிறுவனங்களுக்கான கள விஜயங்களை மேற்கொள்ளுதல் ஆகியன உள்ளடங்கும். சரிபார்ப்பு அறிக்கையின் வரைவு கலந்துரையாடலுக்காக DPMM இற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதனைத் தொடர்ந்து ஆலோசனை நிறுவனம் உரிய காலக்கெடுவிற்குள் அறிக்கையை இறுதிப்படுத்தி DPMM இற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

ஆர்வமுள்ள ஆலோசனை நிறுவனங்கள் இப்பணியை நிறைவேற்றுவதற்குத் தேவையான தொடர்புடைய தகைமைகள் இதற்கு ஒத்த பணிகளில் பெற்ற அனுபவம், போதிய ஆற்றல் மற்றும் வளங்கள் தம்மிடம் உள்ளன என்பதை உறுதிப்படுத்தும் தகவல்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

ஆலோசனை நிறுவனங்கள் பின்வரும் குறைந்தபட்ச தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்:

- நிறுவனப் பதிவாளர் அல்லது பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட ஆலோசனை நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்தும் செல்லுபடியாகும் வணிகப் பதிவுச் சான்றிதழைக் கொண்டிருக்க வேண்டும்.
- கருத்திட்டச் சரிபார்ப்புத் துறையில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும்.
- அரசாங்கம் அரசுக்குச் சொந்தமான தொழில் நிறுவனங்கள் அல்லது ஏனைய நிறுவனங்கள் தொடர்பான இதற்கு ஒத்த கருத்திட்டச் சரிபார்ப்புப் பணிகளை மேற்கொண்டமைக்கான நிரூபிக்கக்கூடிய அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும்.
- கடந்த மூன்று (03) வருடங்களாகச் சிறந்த நிதி நிலைமையையும் நேர்மறையான நிகரச் சொத்துக்களையும் கொண்டிருக்க வேண்டும்.

ஆலோசனை நிறுவனம் 2007 ஆம் ஆண்டின் ஆலோசனைச் சேவைகள் கொள்வனவு வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தையும் செலவையும் அடிப்படையாகக் கொண்ட தெரிவு முறைமைக்கு (Quality and Cost Based Selection – QCBS) அமைவாகத் தெரிவு செய்யப்படும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யும் நிறுவனங்கள் நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திலிருந்து பணிக்கான நிபந்தனைகள் (Terms of Reference – TOR) உள்ளடங்கிய முன்மொழிவுக்கான கோரிக்கை ஆவணத்தை (Request for Proposals – RFP) பெற்றுக்கொள்ளலாம். இதற்காகத் திருப்பிச் செலுத்தப்படாத ரூ. 5000.00 கட்டணத்தைப் பணமாகச் செலுத்த வேண்டும். குறித்த ஆவணங்களை 2026.11.01 முதல் 2026.11.30 வரை அலுவலக நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பதாரர்கள் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளமான https://www.treasury.gov.lk இல் பணிக்கான நிபந்தனைகளை (TOR) உள்ளடங்கிய முன்மொழிவுக்கான கோரிக்கை ஆவணத்தை (RFP) ஆங்கில மொழியில் பார்வையிடலாம். இணையத்தளத்தில் காணப்படும் ஆவணங்கள் பார்வையிடுவதற்காக மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்கள் தமது தொழில்நுட்ப முன்மொழிவையும் நிதி முன்மொழிவையும் தனித்தனியான முத்திரையிடப்பட்ட (Sealed) உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் ஒரு வெளி உறைக்குள் இட்டு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்க வேண்டும். வெளி உறையின் இடது மேல் மூலையில் "சரிபார்ப்பிற்காக ஆலோசனை நிறுவனமொன்றைத் தெரிவு செய்தல்" என்னும் விடயம் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

இப்பணியின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூ. 56.0 மில்லியன் ஆகும்.

பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படும் முன்மொழிவுகள் 2026 நவம்பர் 30 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கொழும்பு 01 செயலகம், நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் மூன்றாவது மாடியில் அமைந்துள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடப்பட வேண்டும்.

முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு முடிவடைந்தவுடன் அவை திறக்கப்படும். எந்தவொரு விண்ணப்பதாரரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியும் முன்மொழிவுகள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

முன்மொழிவுக்கு முன்னரான கூட்டம் (Pre-Proposal Meeting), 2026 நவம்பர் 06 ஆம் திகதி காலை 11.30 மணிக்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் (DPMM) அறை இலக்கம் 328 இல் நடைபெறும்.

மேலதிக தெளிவுபடுத்தல்களைப் பெறுவதற்கு வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளரை, தொலைபேசி இலக்கம் 011-2034412 மற்றும் மின்னஞ்சல் முகவரி peiris.dacd@pmmd.treasury.gov.lk ஊடாகத் தொடர்புகொள்ளலாம்.

நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் நிராகரிக்கப்படும். எந்தவொரு முன்மொழிவையும் அல்லது அனைத்து முன்மொழிவுகளையும் ஏற்றுக்கொள்வதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ அமைச்சு ஆலோசகர்கள் பெறுகைக் குழுவிற்கு முழு உரிமை உண்டு.

தலைவர்
அமைச்சு ஆலோசனைக் பெறுகைக் குழு
கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
செயலகம்
கொழும்பு – 01, இலங்கை
01.11.2026